Vol : 8

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

Issue : 11

Price Rs. 3

# HUNDRED VILLAGE MINISTRY

September 2008

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




## 2008 செப்டம்பர்

**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.**

மத்தேயு 6:4

கர்த்தருடைய கிருபையினால் புதுக்கோட்டை மாவட்டம் – **லேனாவிளக்கு** இலங்கை அகதி முகாமில் கட்டப்பட்டுள்ள ஜெபவீட்டை 21.07.2008 அன்று TVGM ஸ்தாபகர் **P.T. கிறிஸ்டோபர்** திறந்து வைத்து தேவசெய்தியளித்தார்கள்.



**இயேசு கிறிஸ்துவே கர்த்தர்**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICER**
காரியதரிசி கடித நாள்: 11.08.08.



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

ஜுலை மாதத்தில் TVGM ஸ்தாபகர் இந்தியாவின் தலைநகரான **டெல்லி** பட்டணத்தில் ECI சபையில் தேவ செய்தி கொடுக்கவும். TVGM ஊழியங்களை அறிமுகப்படுத்தவும் கர்த்தர் கிருபை செய்தார்.

தற்சமயம் 8 ஜெபவீடுகள் கிராமங்களில் கட்டப்பட்டு வருகிறது. தேவனைத் துதியுங்கள்.

மிக முக்கியமாக TVGM தலைமை அலுவலகத்தில் **நிர்வாக அலுவலகமும்,** திருநெல்வேலி மாவட்டம் கோடாவிளையில் **டாக்டர். லாரன்ஸ் ஹாலும்** கட்டப்பட்டு வருகிறது. அத்துடன் சிறுவர் இல்ல கட்டடப்பணி அஸ்திபார வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது. ஜெபியுங்கள்.

தலைமை அலுவலகத்திற்கு Accountant, Typist தேவனால் அழைக்கப்பட்டவர்கள், கிடைக்கும் படியாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,
***Stephen Christopher***

## உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| Wrapper - Inner | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| வாக்குத்தத்த செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| நாமக்கல் – ராசிபுரம் 100 கிராம ஊழியம் நோட்டீஸ் | 9 |
| தோவாளை யூனியன் 100 கிராம ஊழிய அறிக்கை இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை | 10 -13 |
| விசுவாசிகளின் சாட்சிகள் | 14 |
| புறமத நண்பர்கள் சாட்சி குன்னாண்டார் கோவில் இயேசுவை விரும்புவோர் முகாம் | 15 |
| AJC நடமாடும் சுவிசேஷக் குழு திருமயம் யூனியன் 100 கிராம ஊழிய அறிக்கை | 16,17 |
| புதிய ஜெபவீடு கட்டுதல் | 18 |
| தினசரி ஜெபக்குறிப்புகள் | 19 |
| துதி ஆராதனை, அறிமுகப் பணி அலுவலகம் | 20 |
| போட்டோ (சுவிசேஷப் புத்தக பார்சல் கோடாவிளை சிறுவர் இல்ல கட்டிடம்) | W 3 |
| தொடர்பு முகவரி | W 4 |

# உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை ஆவலோடு எதிர்பார்த்து கொண்டிருக்கும் தேவ ஊழியரே, விசுவாசியே சகோதரனே, சகோதரியே,

"**உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்**" என கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை கொண்டு வாழ்த்துகிறோம்.

நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன தெரியுமா ?

**உன் வலது கை செய்கிறதை, உன் இடது கை அறியாதிருப்பதாக.**

இன்றைக்கு நீங்களும் நானும் செய்கிறதை, ஊர் அறிய வேண்டும், உலகம் அறிய வேண்டும் என வாஞ்சிக்கிறோம். அநேக நேரங்களில், நாம் செய்வது கொஞ்சம். ஆனால் நாம் செய்வதுபோல நம்மை விளம்பரப் படுத்துவதோ ஏராளம்.

ஆனால் யோவான் ஸ்நானகன் கூறுவதைக் கேளுங்கள்.

"**இயேசு பெருக வேண்டும்**
**நான் சிறுகவேண்டும்**".ஆமென்

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே உன்னைப் பற்றிய விளம்பரம், உன் சபையைப் பற்றிய விளம்பரம், உன் ஊழியத்தைப் பற்றிய விளம்பரம் குறைய வேண்டும்.

ஆனால் ஊழியமோ பெருக வேண்டும். ஆத்தும ஆதாயமோ பெருக வேண்டும். தான தர்மங்களோ பெருகவேண்டும். உபவாசமோ பெருகவேண்டும். ஜெபமோ பெருகவேண்டும். இரக்க குணமோ பெருகவேண்டும். ஆவியின் கனிகளோ பெருக வேண்டும். ஆவியின் வரங்களோ பெருக வேண்டும்.

**எப்பொழுது பெருகும் ?**

நீங்கள் சிறுகும்போது மாத்திரமே. நீங்கள் திரைக்குப் பின்னால் நிற்கும்போது, திரைக்கு முன்னால் இயேசு நிற்பார். நீங்கள் திரைக்கு முன்னால் வந்துவிட்டால், இயேசு திரைக்குப் பின்னால் போய்விடுவார். ஆதலால் சங்கீதக்காரர் கூறுகிறார் "**கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.**"

தேவ ஊழியரே, நீங்கள் அசைக்கப்படுவதில்லை. ஊழியக்காரியே நீங்கள் அசைக்கப் படுவதில்லை. விசுவாசியே நீங்கள் அசைக்கப்படுவதில்லை.

**தேவையானது ஒன்றே.**

கர்த்தரை உங்கள் முன்பாக வையுங்கள். கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

**அவர் பெருகவேண்டும்,** நீங்கள் சிறுகவேண்டும் என அந்தரங்க எண்ணத்தில் வாஞ்சியுங்கள். அவர் நாமத்தையே எப்பொழுதும் சொல்லுங்கள்.

**பக்தன் பாடுகிறான்:**

**உன் நாமம் சொல்ல சொல்ல**
**என் நெஞ்சம் மகிழுதையா**
**என் வாழ்வில் மெல்ல மெல்ல**
**என் இன்பம் பெருகுதையா**

ஆம், இயேசுவின் நாமத்தை சொல்ல சொல்ல, உன் நெஞ்சம் மகிழும் உன் வாழ்வில் இன்பம் பெருகும். ஆதலால் எப்பொழுதும் கர்த்தரையே உங்கள் மனக்கண் முன்னால் நோக்குங்கள்.

"மனுஷன் முகத்தைப் பார்ப்பான்;
கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்"
1சாமு 16:7

**மத்தேயு 6:18** கூறுகிறது
**"அந்தரங்கத்தில் பார்க்கிற, உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்"** ஆமென்!

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே! இந்த மாதத்தில், நீங்கள் வெளியரங்கமாய் பலனையும், பதிலையும் காணப்போகிறீர்கள். என்னுடைய அந்தரங்க ஜெபத்திற்கு பதில் இல்லையே என ஏங்கி தவிக்கும் சகோதரியே, நீங்கள் வெளியரங்கமாய் பலனையும், பதிலையும், காணப்போகிறீர்கள். அல்லேலூயா.

**அந்தரங்க ஜெபம்**
**வெளியரங்க பலன்.** ஆமென்.

மத்தேயு எழுதின சுவிசேஷம் 6–ம் அதிகாரத்தில் 3 சந்தர்ப்பங்களில் **அந்தரங்கத்தை** குறித்து இயேசு குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

**1. தர்மம் செய்தல்:–**

முதலாவது தர்மம் செய்வதில் **அந்தரங்கம்** நமக்கு தேவை. நாம் ஏழைகளுக்கு செய்கிற உதவியை மற்றவர்கள் அறிய வேண்டும் என விரும்ப வேண்டாம்.

மனுஷர் காண வேண்டும் என்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தை செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!
**பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்திலிருந்து பலன் வேண்டுமா?**
அல்லது
**மனுஷர் உங்கள் தானதர்மத்தைக் காணவேண்டுமா?**
**இன்றே தீர்மானியுங்கள்.**

**கர்த்தரிடத்திலிருந்து வரும் புகழ்ச்சி உங்களுக்கு வேண்டுமா?**
அல்லது
**மனுஷரிடத்திலிருந்து வரும் புகழ்ச்சி உங்களுக்கு வேண்டுமா?**
தீர்மானம் உங்கள் கையில்!
எப்படியாயினும் உங்கள்
தானதர்மங்களுக்கு புகழ்ச்சி
காத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் ஒன்றே ஒன்று **"கர்த்தரிடத்திலிருந்தா?** அல்லது **மனுஷரிடத்திலிருந்தா?**

வேதம் சொல்கிறது **ஏசாயா 2:22ல்**
**"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்"**

உன்னோடு வேலைபார்ப்பவர்கள், உன்னோடு பழகுபவர்கள், உன்னுடைய நண்பர், உற்றார், உறவினர் மற்றும் உனக்கு மேற்பட்டவர்கள், கீழ்ப்பட்டவர்கள் காண வேண்டுமென்று தானதர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

வேதம் சொல்கிறது **மத்தேயு 6:2**ல்

நீ தர்மஞ்செய்யும்போது மனுஷரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். அன்பு தேவபிள்ளையே **மாயக்காரர்** என்ற பட்டம் உங்களுக்கு வேண்டாம்.

**மத்தேயு 6:3,4**

**நீயோ தர்மம் செய்யும் போது உன் தர்மம்அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.**

அப்பொழுது **அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். ஆமென் அல்லேலூயா.**

**2.ஜெபம் பண்ணுதல்:–**

**மத்தேயு 6:5** அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்திகளிலும், நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே! மனுஷர் காணவேண்டுமென்று, அதிகமான வசனங்களைச் சொல்லி அடுக்கு மொழியில் சத்தத்தை உயர்த்தி, தாழ்த்தி, குரலை மாற்றி கண்ணீர் விடுவது போல் ஜெபித்தால் இயேசு உனக்கு கொடுக்கும் பட்டம் "**மாயக்காரர்**" தேவ ஊழியரே, ஊழியக்காரரே, விசுவாசியே வேண்டாம், வேண்டாம், **"மாயக்காரர்"** பட்டம் வேண்டாம். "மனுஷர் உங்களை புகழ்ச்சியாய் பேசும்போது உங்களுக்கு 'ஐயோ'

<u>**மத்தேயு 6:6**</u> நீயோ, ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கும் உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு– என இயேசு கூறினார். ஆனால் நாமோ இதற்குப் பதிலாக,அநேக நேரங்களில் நிகழ்ச்சி நிரல்களில் ஜெபம்பண்ண நம்முடைய பெயர் போட்டிருக்கிறதா என்பதைத் தான் கவனித்துப் பார்க்கிறோம். இந்த எண்ணத்தை மாற்றி என் ஜெபத்தை அந்தரங்கத்திலிருக்கிற பிதா பார்க்கவேண்டும் என வாஞ்சியுங்கள்.

<u>**மத்தேயு6:7**</u> **அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்கு பலனளிப்பார்.** ஆமென்.

**3. உபவாசம் செய்தல்:–**

<u>**மத்தேயு 6: 16**</u> நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள். அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

என் அன்பு சகோதரியே, நீங்கள் எவ்வளவோ உபவாசித்தும் உங்களுக்குப் பலன் இல்லை. ஏன் மனுஷர் காணவேண்டுமென்ற உபவாசம். இனிமேல் **முகவாடலாய் இராதேயுங்கள்.**

<u>**மத்தேயு6:18**</u> அப்பொழுது **அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.**

என் அன்பு சகோதர, சகோதரியே!

**இந்த மாதத்தில் நீங்கள் வெளியரங்கமாய்ப் பலனையும் பதிலையும் காணப்போகிறீர்கள்.**

**மனுஷரால் புகழப்படுவதற்கு தர்மம் செய்யவேண்டாம்.**

**மனுஷர் காணுவதற்கு ஜெபம் செய்ய வேண்டாம்.**

**மனுஷர் காணுவதற்கு முகவாடலாய் உபவாசம் வேண்டாம்.**

அப்பொழுது **அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பதிலளிப்பார்.**

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**" என் பிதா எனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்"**

**மீண்டும் மீண்டுமாய் கூறுங்கள்.**

**என் பிதா எனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார். ஆமென்.**

**தேவனுக்கே மகிமை. ஆமென்!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## நாமக்கல் மாவட்டம்- ராசிபுரம் யூனியன்

## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2008 செப்டம்பர் 15** திங்கள் காலை 9 மணி முதல் **செப்டம்பர் 19** வெள்ளி இரவு 10 மணி முடிய **நாமக்கல் மாவட்டம் - ராசிபுரம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2008 செப்டம்பர் 15** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2008 செப்டம்பர் 19** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2008 செப்டம்பர் 15 - 19 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர், TVGM காரியதரிசி.**
**C/o A.G. சர்ச்,**
**புதிய ஏதேன் நகர், புதுப்பாளையம் ரோடு,**
**ராசிபுரம் - 637 408.**
**நாமக்கல் மாவட்டம்.**
**செல் : 94436 22070**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த பாஸ்டர் **C.ரவி ஜான்சன்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# கன்னியாகுமரி - தோவாளை யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

**THANKS: LIGHT HOUSE MINISTRIES-NECK**



கர்த்தருடைய பெரிதான கிருபையால் கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை யூனியனில் 14.07.2008 முதல் 18.07.2008 வரை 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள் கூடுமிடம், உணவு, இனிப்பு இவைகளை தோவாளை **பாஸ்டர் ஜான் E. கிறிஸ்டோபர்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள். TVGM கிளை அலுவலக சகோதரிகள், ஒருங்கிணைப்பாளர் **சகோதரி ஷோபனா இவாஞ்சலின்** தலைமையில் ஜெபத்தோடு மிகவும் பிரயாசப்பட்டார்கள்.

தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களிலிருந்து 50 பேர் கிராம ஊழியம் செய்ய வந்திருந்தனர். இவர்கள் முதல் நாள் கூடி தோவாளை யூனியனிலுள்ள கிராமங்களுக்காக, ஜனங்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபித்தார்கள். சகோ.P.T. கிறிஸ்டோபர் TVGM ஸ்தாபகர் தலைமை தாங்கி ஜெபத்தில் வழிநடத்தினார்கள். **பாஸ்டர் ஜான் E. கிறிஸ்டோபர்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். **சகோதரி ஷோபனா** கிராம ஊழியர்களை ஜெபத்தில் நடத்தினார்கள்.

இதன்பின் 50 கிராம ஊழியர்களையும் 12 குழுவாகப் பிரித்து, அவர்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களின் பெயர்பட்டியல் கொடுக்கப் பட்டது. 12 குழுவினரும் தனித்தனியாக தங்களை கர்த்தர் கிராமங்களில் எடுத்து பயன்படுத்தும்படி ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு கிராமங்களுக்குள் ஜெபித்து அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் போய் கிராமங்களில் தங்கிக் கொண்டு 5 நாட்கள் ஊழியம் செய்து, வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதிகள், சிலுவைக்கொடிகள் இலவசமாக கொடுத்து, நற்செய்தியை அறிவித்தார்கள். ஊழியங்களை முடித்து கடைசிநாளில் மீண்டும் முன்பு கூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மொத்தம் 11,965 யோவான் சுவிசேஷப் புத்தகங்களும், 10,000 சிலுவைக் கொடிகளும், 20,000 கைப்பிரதிகளும் ஜனங்களுக்கு வழங்கி கர்த்தருடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார்கள். 176 பேர் தங்களுடைய விலாசங்களைக் கொடுத்து வேதபாடம் தபால் மூலம் அனுப்பும்படி கேட்டார்கள்.

இந்த கடைசிநாள் ஜெபத்தில் தோவாளை **பாஸ்டர் ஜான் E. கிறிஸ்டோபர்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். TVGM கிளை அலுவலக ஒருங்கிணைப்பாளர் சகோதரி ஷோபனா சிறப்பு பாடல்களை பாடினார்கள். இதன்பின் கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படி வழங்கப்பட்டது.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோ.மாற்கு மாரியப்பன், சாமுவேல், மகாராஜன், ஜான் அழகப்பன்.**

திடல் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சென்று வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்தோம். மக்கள் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டார்கள். கடுக்கரை என்ற கிராமத்தில் முழுவதும் இந்துக்கள் வசிக்கிறார்கள். அங்கு அமைதியாக சத்தியத்தை சொல்லி, சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்தோம். பிசாசு பிடித்தவர்களுக்காகவும், வியாதி யுள்ளவர்களுக்காகவும் ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும் 830 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 2: சகோ.தாஹாகனி, சூசை மாணிக்கம், ஜோசப் பெஞ்சமின்.**

நாங்கள் காட்டுப்புதூர் ஊராட்சி யிலுள்ள 10 கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகம், சிலுவைக்கொடிகள், கைப்பிரதிகள் கொடுத்தோம். மக்கள் யாவரும் உற்சாகமாக வாங்கினார்கள். பாரம்பரிய கிறிஸ்தவர்கள் அதிக வாஞ்சையோடு சத்தியத்தைக் கேட்டனர். வியாதியஸ்தர்களுக்காகவும், பிரச்சனை யுள்ளவர்களுக்காகவும் ஜெபித்தோம். 700 சுவிசேஷப் புத்தகங்களும், 810 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 3: சகோ.பிரேம் ஆனந்து, யோசுவா, பாபு சாலமோன், எபிநேசர்.**

கீரன்குளம், செம்பொன்விளை, பேயோடு, மேல்சிரை, அழகியபாண்டிபுரம், குறத்தியறை ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்து வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். வடக்கு பேயோடு கிராமத்தில் ஒருவர் ஏன் இங்கு வந்து இதையெல்லாம் கொடுத்து மதக் கலவரத்தை உண்டுபண்ணுகிறீர்கள் ? போலீசுக்கு போன் செய்வேன், 10 பேரை கூட்டி வந்து அடிப்பேன், ஒழுங்காக போய் விடுங்கள் என்று சொல்லி நாங்கள் வைத்திருந்த சுவிசேஷப் புத்தகங்களை பிடுங்கி வீசி எறிந்தார். தெற்கு பேயோடு பகுதியில் ஒரு பெண் எங்கள் பகுதிக்கு உங்களால் செல்லமுடியாமா ?என்று சவால் விட்டார். நாங்கள் பின்பக்கமாக சென்று அங்குள்ள எல்லா வீடுகளுக்கும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்துவிட்டு, சவால்விட்டு பிரச்சனை செய்த அந்த பெண் வீட்டு வழியே கடந்து போனோம். மொத்தம் 1265 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 4:சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், ஆரோக்கியம்,கரோலின் கிறிஸ்டோபர், லட்சுமி கிரேஸ், கிளமெண்ட்ஸ்மேரி.**

ஞாலம், தெரிசனங்கொப்பு ஆகிய ஊராட்சிகளிலுள்ள வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவித்து புத்தகம்,கைப்பிரதி, சிலுவைக்கொடிகளைக் கொடுத்தோம். சிரமடம் என்ற கிராமத்தில் பிராமணர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இவர்களுக்கு சுவிசேஷம் சொன்னபோது, ஒருவர் இந்து தெய்வங்களிடம் இல்லாதது இதில் என்ன இருக்கிறது. மதத்தைப் பரப்புவதற்காக இப்படி வெறிகொண்டு அலைகிறீர்கள் என்று சொல்லி நாங்கள் கொடுத்த சுவிசேஷப் புத்தகத்தை கிழித்துப் போட்டார். நாங்கள் வேறுபகுதிக்கு சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை, லீதியாள், சலோமி சம்மனசு.**

பூதப்பாண்டி ஊராட்சியிலுள்ள 13 கிராமங்களுக்கு சென்று யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். அங்கு

யாவரும் வாஞ்சையோடு வாங்கினர். முஸ்லீம் மக்கள் அதிகமாக உள்ள மார்த்தாள் என்ற கிராமத்தில் ஊழியம் செய்து கொண்டு வரும்போது ஒரு வாலிபன் எங்களை மிரட்டுவதுபோல பேசி தர்க்கம்பண்ணி, இந்த இடங்களில் புத்தகம் கொடுக்கக்கூடாது என்று எங்களை விரட்டினான். ஆனால் நாங்கள் அந்த கிராமங்களில் முன்னமே புத்தகங்களைக் கொடுத்து முடித்து விட்டோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 6:</u> சகோதரி மரியம்மாள், கஸ்தூரி சுப்பையா, மேரி மீனா, ரூத் பகவதி.**

எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த 14 கிராமங்களில் சென்று, வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து, இயேசுவின் நற்செய்தியை அறிவித்தோம்.கனகமூலம் குடியிருப்பு என்ற பகுதியில் ஐயாவழிக்கா ரர்கள் இருக்கிறார்கள். இந்த பகுதிக்கு சென்று சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, எங்களை வழிமறித்து இப்போது உங்களை என்ன செய்கிறோம் பாருங்கள் என்று எங்களை விரட்டினார்கள். வீரநாராயணபுரத்திலும் எங்களை ஏன் இங்கு வந்தீர்கள் ? நாங்கள் மகாபாரதம், பகவத்கீதை, இராமாயணம் இவைகளை கொடுத்தால் நீங்கள் வாசிப்பீர்களா ? என்றதும் நாங்கள் இவைகளையெல்லாம் வாசித்துவிட்டுத் தான் இங்கு வந்தோம். நாங்களும் இந்துக்களாக இருந்தவர்கள் தான் என்று சொன்னபோது சிலர் புத்தகம் வாங்கிக் கொண்டார்கள். இப்படியாக மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 7:</u> சகோதரி டோரா லாசர், அமிர்தம், அந்தோணிமேரி, ஷீலா.**

இறச்சகுளம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் அன்போடு எங்களை வரவேற்று புத்தகங்களை வாங்கினார்கள். நாங்கள் கொடுத்துவிட்டு வந்த ஒரு யோவான் புத்தகம் கிழிக்கப்பட்டு தண்ணீரில் கிடந்ததைப் பார்த்து, ஜெபித்து விட்டு வந்தோம். நெற்றியில் குங்குமம், திருநீறு பூசியிருந்தவர்கள் இரண்டு பேர் மிகவும் ஆர்வத்தோடு சுவிசேஷப் புத்தகங்களை வாங்கினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 8:</u> சகோதரி வசந்தா ஸ்டீபன், ஜெபமணி, அன்னக்கிளி, கிரேஸ் பத்மா.**

நாங்கள் போன கிராமங்களில் எந்த எதிர்ப்பும் இல்லாமல் வீடுவீடாக சென்று சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்தோம். அநேக வீடுகளில் எங்களை ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். சில பெண்கள் தங்கள் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிக்கும்படி கூறினார்கள். ஜெபித்து வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 9:</u> பாஸ்டர் ஆல்வின், சகோ. ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், தங்கவேல் தாவீது.**

வெள்ளமடம், வேம்பத்தூர், பீமநகர் பகுதிகளில் சுவிசேஷம் அறிவித்து, யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டு சத்தியத்தைக் கேட்டனர். ஒரு வீட்டில் அம்மா கையில் கொடுத்த புத்தகத்தை மகன் பிடுங்கி எங்களிடம் இது தேவையில்லை என்று சொல்லி திருப்பிக் கொடுத்து விட்டான். கரையான்குழி என்ற கிராமத்தில் ஊழியம் செய்து கொண்டு வரும்போது, மத்தியான வேளையில் அங்கு வந்த கொத்தனார் ஒருவர் எங்களுக்கு டீ வாங்கிக் கொடுத்தார். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோதரி எஸ்தர்.தெபோராள், அன்னாள், சமாதானமேரி.**

நாங்கள் 12 கிராமங்களில் சென்று வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். யாவரும் சந்தோஷமாக இருகரம் நீட்டி வாங்கினர். சிலர் எங்களை அவர்கள் வீட்டுக்குள் அழைத்து ஜெபிக்கும்படி கேட்டார்கள். வியாதியுள்ளவர்கள், பிரச்சனையுள்ளவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும்,800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 11: பாஸ்டர் ஏசுராஜா, சகோ.வீமன் இஸ்ரவேல், இஸ்தாக்கி, ஜேசுராஜன்.**

தோவாளை யூனியனிலுள்ள 14 கிராமங்களுக்கு சென்று சுவிசேஷத்தை அறிவித்தோம். தேவர்நகரில் ஊழியம் செய்யும்போது 3 பேர் மோட்டார் சைக்கிளில் வந்து எங்கள் அருகே நிறுத்தி, யார் எங்கேயிருந்து வந்திருக்கிறீர்கள் என்று கேட்டுக் கொண்டே எங்கள் கையில் இருந்த சிலுவைக் கொடிகளை பிடுங்கி கிழித்துப் போட்டுவிட்டு, எங்களை விரட்டி மீண்டும் இந்த பகுதிகளில் இதுபோல கொடுத்தால் உயிரோடு திரும்பிச் செல்லமாட்டீர்கள் என்று சொன்னார்கள். நாங்கள் வேறு பகுதிக்கு சென்று ஊழியம் செய்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 890 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12: சகோதரி லூயிஸ் அம்மாள், கிருபா பழனியம்மாள், ஜோதிமணி, அபியேல் அந்தோணியம்மாள்.**

குமாரபுரம், தாணுமலையான்புதூர், வடக்கூர், கணேசபுரம் ஆகிய இடங்களில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். ஒரு முஸ்லீம் பெண் உங்கள் இயேசு வேண்டாம் என்றாள். வடக்கூரில் உள்ள பூசாரி ஒருவர் யாரைக் கேட்டு புத்தகம் கொடுக்கிறீர்கள், நீங்கள் இங்கிருந்து உடனே போய்விடுங்கள் என்றார். சுப்பிரமணிபுரத்தில் ஒருவரிடம் புத்தகம் கொடுத்தபோது நாங்கள் உங்களிடம் புத்தகம் கேட்டோமா? உங்களுக்கு வேறு பிழைப்பு இல்லையா? என்று துஷணமாக பேசினான். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## 2008ஜுலை மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை




கர்த்தருடைய கிருபையால் 26.07.2008 அன்று திண்டுக்கல் மாவட்டம் ஆத்துார் யூனியனில் **இயேசுவை விரும்புவோம் முகாம்** 'செம்பட்டி **தேவமகிமை சபை**யில்' வைத்து நடைபெற்றது.

இம்முகாமிற்கு வரும்படி ஆத்துார் யூனியனிலிருந்து TVGM உடன் கடிதத் தொடர்பு கொண்டுள்ள 50 புறமத நண்பர்களுக்கு அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டது. உதயக்குமார் என்ற ஒருவர் மட்டும் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார். இவருக்கு இயேசுகிறிஸ்துவின் அன்பை எடுத்து கூறியபோது, அவர் அன்போடு ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து சபையில் ஐக்கியம் கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறியபோது, சரியென ஒப்புக்கொண்டார். இவருக்காக **பாஸ்டர் ஜான் கணேசன்** அவர்கள் ஜெபித்தார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

# ✷ இயேசு கிறிஸ்துவே கர்த்தர் ✷

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

1. Bro. **ஆரோக்கியதாஸ், புதுகை.**

என் மகளுடைய திருமண காரியம் தடைப்பட்டு கொண்டேயிருந்தது. 100–கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் நல்ல மணமகனை தந்து திருமணத்தை நடத்தி தந்தார்.

2. Sis. **ஜீவகாந்தி, கோவை.**

என் மருமகள் சுகம் பெறவும், மருமகனுக்கு பிரஷர் குறையவும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்து, **"கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்"** என்ற வசனத்தை வாக்குத்தத்தமாக எழுதியிருந்தீர்கள். கர்த்தர் இந்த வசனத்தின்படியே அற்புதங்களை செய்துள்ளார். மருமகள் தற்போது சுகம் பெற்று 6 மாத கர்ப்பிணியாக இருக்கிறாள். மருமகனுக்கும் பிரஷர் நார்மலாக இருக்கிறது.

3. Sis. **ருக்குமணி, திண்டுக்கல்.**

என் மகன், அக்கா மகள் மற்றும் பள்ளியிலுள்ள பிள்ளைகளின் தேர்வுக்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்து ஏப்ரல் மாதத்தில் **'உன் நம்பிக்கை வீண்போகாது'** என்ற வசனத்தையும், மே மாதத்தில் **'கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்'** என்றும் வாக்குத்தத்தமாக எழுதியிருந்தீர்கள். இந்த வசனத்தின் படியே கர்த்தர் மகத்தான வெற்றியைக் கொடுத்தார்.

4. Rev. **மரியலூயிஸ், தர்மபுரி.**

என் மகனுக்கு வேதாகம கல்லூரியில் இடம் கிடைக்கவும், யாராவது உதவி செய்யவும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். மகனுக்கு இடம் கிடைக்கவும், ரூ.20,000 உதவி கிடைக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

5. Sis. **பியூலா ராஜி, மதுரை.**

எனது கையில் அரும்பாரை இருந்தது. அது மறைய டாக்டரிடம் கேட்டேன். ஆப்பரேஷன் செய்துதான் எடுக்க முடியும் என்றார்கள். எங்கள் வீட்டில் கேட்டேன் மாதாகோவிலுக்கு உப்பு, மிளகு வாங்கிப் போட சொன்னார்கள். நான் ஒரே தெய்வம் இயேசுவையே நம்பி ஜெபித்தேன். உங்களுக்கும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். இப்போது எனக்கு ஒரு அரும்பாரை கூட இல்லை.

6. Bro. **கோபிநாத், மதுரை.**

எனது சித்திக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிக்கும்படி உங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு கர்ப்பத்தின் கனி கிடைக்க கிருபை செய்தார். இப்போது 6 மாத கர்ப்பமாக உள்ளார்கள்.

7. Sis. **நிர்மலா, பெங்களூர்.**

என்னுடைய நகைகள் எங்கு வைத்தேன் என்று தெரியாமல் வீடு முழுவதும் தேடினேன். 07.07.2008 அன்று போன் செய்து ஜெபிக்க சொன்னேன். என் பக்கத்திலிருந்த 100–கிராம ஊழிய பத்திரிக்கையின் அட்டையில் **சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்** என்ற வேதவசனம் இருந்ததை பார்த்து திடன்கொண்டேன். ஏறக்குறைய 7 பவுன் நகை 08.07.2008 அன்று தேவன் கிடைக்கும்படி செய்தார்.

8. Sis. **லிடியா, பெங்களூர்.**

என் மகளுடைய டிப்ளமோ காலேஜ் அட்மிஷனுக்காக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு இடம் கிடைக்க செய்தார்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்:

1. Sis. **பாக்கியம், நாமக்கல்.**

என் கணவரின் சொத்தை பிரித்து தரும்படி என் மாமனாரிடம் கேட்டோம். அவர் தரவில்லை. மாமா சொத்தை பிரித்து தரும்படி ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சொத்தை பிரித்து தரும்படி உதவி செய்தார். தேவனுக்கே மகிமை.

2. Sis. **ரேணுகாவதி, கரூர்.**

என் அம்மாவுக்கு சுகர் வியாதியினால் இடதுகால் பெருவிரல் புண் ஏற்பட்டு ஆப்பரேஷன் செய்துள்ளார்கள். இதினி மித்தம் மன வேதனையுடன் ஆஸ்பத்திரி யிலிருந்து வீட்டுக்கு வந்தபோது உங்கள் கடிதம் கிடைத்தது. அதிலுள்ள வார்த் தைகள் எனக்கு சந்தோஷத்தைத் தந்தது.

3. Sis. **சசிகலா, கடலூர்.**

நான் கடந்த ஆண்டு செமஸ்டர் தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண்களோடு வெற்றி பெற்றால் 100–கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் அனைத்துப் பாடங்களிலும் 80% மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார்.

4. Sis. **ராஜேஸ்வரி, தேனி.**

என் அக்காவிற்கு ஆண்குழந்தை பிறக்க வேண்டுமென்று தங்களுக்கு ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு அழகான ஆண்குழந்தையை தந்தார்.

### 2008 செப்டம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : புதுக்கோட்டை
யூனியன் : குன்னாண்டார்கோவில்
நாள் : 27.09.2008 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் . டேனியல்**
**விசுவாச ஜெபவீடு,**
**கிழக்கு ரதவீதி,**
**(மின்சார அலுவலகம் பின்புறம்)**
**கீரனூர் – 622 502.**
**புதுக்கோட்டை மாவட்டம்.**
**செல்: 98437 89865.**

**T.V.G.M.தலைமை அலுவலகம்**
**100 கிராமம்,**
**சோமரசம்பேட்டை.**
**திருச்சி – 620 102.**

அலுவலக சேவைக்கு தேவனால் அழைக்கப்பட்ட, அர்ப்பணிப்புள்ள சகோதர, சகோதரிகள் எதிர்பார்க்கும் மாதாந்திர உதவித்தொகையுடன் தங்கள் படிப்பு சான்றிதழ் நகலையும் இதர டெக்னிக்கல் படிப்பு சான்றிதழ் நகலையும், அனுபவங்களையும் மற்றும் குறிப்புகளோடு (Bio-Data) ரூ.10/-TVGM தலைமை அலுவல கத்திற்கு அனுப்பி விண்ணப்பப் படிவம் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தேவை :** அக்கவுண்டன்ட், டைப்பிஸ்ட், சிறுவர் இல்ல வார்டன், கார் டிரைவர், வீடியோ எடிட்டர்.

# 100 கிராம ஊழிய திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்ட சுவிசேஷப் பணி AJC – நடமாடும் சுவிசேஷக் குழு

கர்த்தருடைய கிருபையினால் புதுக்கோட்டை திருமயம் யூனியனில் 17.06.08 முதல் 19.06.08 வரை 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

AJC ஊழியர்கள் 14 பேர், 3 நாட்கள் பங்கேற்றனர். இந்த ஊழியத்தின் மூலம் 3745 வீடுகளுக்கு யோவான் சுவிசேஷப் புத்தகம் மற்றும் சிலுவைக்கொடிகள் இலவசமாக வழங்கப்பட்டது. 60 பேர் தங்கள் முகவரிகளைக் கொடுத்து வேதபாடம் அனுப்பக் கேட்டுக் கொண்டனர்.

## கிராம ஊழியர்களின் சில முக்கிய அனுபவ சாட்சிகள்:-

**குழு 1 பாஸ்டர் ஜெனின், சகோ. கிறிஸ்டோபர்:–** நாங்கள் இருவரும் துளையானூர் பஞ்சாயத்திலுள்ள 11 கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகமும் சிலுவைக் கொடியும் இலவசமாய் வழங்கி சுவிசேஷம் அறிவித்தோம். இங்குள்ள கிராமங்கள் ஒவ்வொன்றிலும் 5 முதல் 10 வீடுகளே காணப்படுகின்றன. இப்படிப்பட்ட கிராமங்களில் அலைந்து திரிந்து ஊழியம் செய்ய தேவன் கிருபை பாராட்டினார். சின்ன டீக்கடை கூட இல்லை. ஆனாலும் தேவன் பெலன் கொடுத்து எங்களை நடத்தினார்.

**குழு 2 சகோ.சுரேஷ், அன்பரசன்:–** நாங்கள் இளஞ்சாவூர் பஞ்சாயத்தில் இருதயபுரம் கிராமத்தில் யோவான் சுவிசேஷம் கொடுத்து மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தோம். இயேசுகிறிஸ்துவை நாங்கள் நம்புகிறோம் என அவர்கள் சொன்னார்கள். பின்னர் சித்தாஞ்சான்பட்டி கிராமத்திலும் சுவிசேஷம் சொன்னோம். அங்குள்ள மக்கள் தங்கள் பிரச்சனைகளை எங்களிடம் சொல்லி தாங்கள் இயேசுவை நம்புவதாகக் கூறினர். இவ்வாறாக கர்த்தர் எங்களை வழிநடத்தினார்.

**குழு 3 சகோ.மாற்கு, ராகுல்:–** எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கோட்டையூர் பஞ்சாயத்திலுள்ள கோட்டையூர், அற்புதாபுரம், தஞ்சம்பட்டி, புதுப்பட்டி, ஆண்டிப்பட்டி ஆகிய கிராமங்களில் யோவான் சுவிசேஷம் மற்றும் சிலுவைக்கொடிகளை கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். எந்த ஒரு எதிர்ப்புமின்றி திறந்த வாசலைக் கர்த்தர் எங்களுக்குத் தந்தார். பின்னர் வினையூர் பஞ்சாயத்திலுள்ள காரியப்பட்டி, தெற்கு மல்லுப்பட்டி, வடக்கு மல்லுப்பட்டி, சவேரியார்புரம், காயம்பட்டி, சாத்தான்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் நாங்கள் ஊழியம் செய்தோம். இங்கும் கர்த்தர் திறந்த வாசலை வைத்திருந்தார்.

**குழு 4 சகோ.இம்மானுவேல், சார்லஸ்:–** நாங்கள் பாப்பாவயல் என்ற கிராமத்தில் யோவான் சுவிசேஷம் கொடுத்து, சுவிசேஷம் அறிவித்தோம். அனைவரும் ஆர்வமாக கேட்டனர். திரும்பி வரும்போது பாலத்தில் அமர்ந்திருந்த 3 பேர் எங்களைக் கூப்பிட்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள் எனக் கேட்டனர். நாங்கள் அவர்களிடம் இயேசுவைப் பற்றி சொன்னோம். ஏற்றுக் கொண்டனர். ஓலைக்குடிப்பட்டி கிராமத்தில் அநேக வீடுகளில் ஆட்கள் இல்லை. புத்தகங்களை வீடுகளில் வைத்து விட்டு வந்தோம். வயதான பெரியவர் ஒருவருக்கு பாவமன்னிப்பு பற்றி எடுத்துச் சொன்னோம். செங்காவிடுதியில் சுவிசேஷம் சொல்லி கை இரண்டும் இல்லாத ஒரு வயதானவரிடம் புத்தகம் கொடுத்து, பாவ மன்னிப்பு குறித்து சொல்லி ஜெபித்தோம்.

மகமாயிபுரம், மணவாளன்கரை, மனவாலி, அண்ணாநகர், இளங்குடிபட்டி கிராமங்களிலும் புத்தகம் வழங்கி சுவிசேஷம் அறிவித்தோம். கர்த்தர் எங்களை அற்புதமாக நடத்தினார்.

**குழு 5 சகோ.இஸ்ரவேல், ஜீவசுந்தர்:–** நாங்கள் கப்பத்தான்பட்டி, நகாத்தான்பட்டி மற்றும் கொத்தமுத்துபட்டி கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். ஒரு தாயார் ‘எங்கள் தெய்வம் கல், மண் – உங்கள் சாமி தான் உண்மையானவர்’ என்றதோடு நம்மைப் படைத்து நமக்கு படியளக்கிறவர் அவர்தான் என்றார். இயேசுவின் இரத்தமே பாவமன்னிப்பைத் தரமுடியும் என்று விளக்கி சொன்னோம். அநேகர் சபைக்கு வருவதாகச் சொன்னார்கள். ஒரு சகோதரர் எங்களுடன் தர்க்கம் பண்ணி இந்து வீடுகளில் ஏன் கட்டாயப்படுத்தி கொடுக்கிறீர்கள். எங்கள் சாமியைப் பற்றி சொன்னால் ஏற்றுக்கொள்வீர்களா ? என்று கேட்டார். நாங்கள் இயேசு சொல்லச் சொன்னார், சொல்கிறோம் என்று சொல்லி போதுமான விளக்கங்களைக் கூறி, தொடர்ந்து ஊழியம் செய்தோம். எதிர்ப்புகள் இல்லை. லெம்பலக்குடியில் அநேகர் ஜெபிக்கக் கேட்டு முகவரியும் தந்தனர். ஒரு கிளி ஜோசியரிடம் இயேசுவே மெய் தெய்வம் , அவரே பரலோகத்தில் நம்மை சேர்க்க முடியும் என்று சொன்னபோது மறுப்பின்றி ஏற்றுக் கொண்டார். பொன்குடிப் பட்டியில் இயேசுவைப் பற்றி ஒருவருக்கும் சரியாகத் தெரியவில்லை. ஏனோ தானோவென்று வாங்கிக் கொண்டனர். ஒரு இளம் பெண் தனக்கு தலையில் முடியில்லை என்று பாரத்தோடு ஜெபித்துக் கொண்டார். அம்மினிப்பட்டி, வண்ணாரப்பெட்டி, பிள்ளைப்பட்டி கிராமங்களில் எதிர்ப்பு இல்லை. அநேகர் புத்தகம் பெற்றுக் கொண்டனர். பிள்ளைப்பட்டியில் ஒரு சிலர் விரக்தியுடன் காணப்பட்டனர். நாங்கள் வேலை செய்தால்தான் சாப்பிட முடியும். எந்த தெய்வம் எனக்கு என்ன செய்யும் ? என்றார் ஒரு பெண்.

**குழு 6 சகோ.முத்தமிழ், லாரன்ஸ்:–** நாங்கள் முதலில் சென்ற திருப்பம்பட்டி கிராமத்தில் செல்வி என்ற சகோதரி ‘முன்பு நான் புதுக்கோட்டை சபைக்கு சென்று கொண்டிருந்தேன். திருமணம் ஆனபின் சபைக்கு இனி போக வேண்டாம் என நினைத்திருந்த வேளையில் கர்த்தரே உங்களை அனுப்பி உள்ளார்’ என்று சொல்லி இனி தான் திருமயம் சபைக்கு போவதாகச் சொல்லி எங்களை அன்புடன் உபசரித்து ஜெபிக்கச் சொன்னார். பின்மாற்றடைந்த ஓர் ஆத்துமாவை இவ்வாறு மீட்டோம். வேப்பம்பட்டி கிராமத்தில் மழையோடு சென்றபோது ஒரு சகோதரி மழையில் நனைந்து கொண்டே புத்தகம் கொடுக்கிறீர்களே என்று சொல்லி பரிவோடு புத்தகத்தை வாங்கி ஜெபிக்கச் சொல்லி சபைக்கு வருவதாக கூறினார். ஏனப்பட்டி காலனியில் ஒரு சகோதரி தான் கர்ப்பவதி யாகும்போது மிகவும் பெலவீனம் அடைவதாகவும், பிசாசின் ஆளுகை இருப்பதாகவும் சொல்லி ஜெபிக்கச் சொன்னார். திருமயம் சபைக்கு வருவதாகச் சொன்னார். குரும்பப்பட்டியில் ஒரு பெண் எங்களிடம் எல்லாம் இருக்கிறது.  ஆனால் நிம்மதி  மாத்திரம் இல்லை . நீங்கள் சொன்னதுபோல இயேசுவிடம் நிம்மதி கிடைக்குமானால் இனி வாராவாரம் சபைக்கு வருகிறேன் என்றார்.ஜெபித்து முகவரி பெற்றுக் கொண்டோம். வேப்பம்பட்டியில் ஒரு பெண் “நீங்கள் இயேசுவை அறிவிக்கிறீர்களா ? நான் அவரைப் பற்றி அறிய விரும்புகிறேன். எங்கு நான் சபைக்குப் போக வேண்டும்” என்றார். நாங்கள் யோவான் புத்தகம் கொடுத்து, முகவரியைக் கொடுத்தபோது, எங்கு போவது என்று தெரியாது இருந்தேன் என கலங்கினார். சபைக்கு வருவதாக சொன்னார். ***தேவனுக்கே மகிமை!***

# எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

தாயனூர்



பெருவளநல்லூர்



அகினேஷ்புரம்



**3 ஜெபவீடு கட்ட ஜெபியுங்கள்!**

அளவு 15'X 30'= 450 சதுரஅடி
1 சதுரஅடி கட்ட = ரூ. 350 (US $ 9)
450 சதுர அடி கட்ட= ரூ.1,57,500/-
(US $ 4000)

உள்ளூர் சபை மக்கள் மூன்றிலொரு பகுதி தேவையையாவது சந்திப்பதற்கு பொருளுதவி செய்வதற்கு முன்வரும்படி ஜெபியுங்கள்.

சென்னிமலை – பசுவப்பட்டி



தேனி – கும்மனந்தொழுவு



Dr.லாரன்ஸ் ஹால்



சென்னிமலை, தேனி, கோடாவிளை ஆகிய மூன்று இடங்களிலும் ஜெபவீடு கட்டுவதற்கு தங்களால் இயன்ற காணிக்கையை கொடுக்க முன்வந்துள்ள பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

## "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** டி.வி.ஜி.எம். சிறுவர் இல்லத்திற்கு 80G ஆர்டர், FCRA ஆர்டர், கோட்டா அரிசி ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** பக்கத்து நிலத்துடன் இருக்கும் எல்கை பிரச்சனை சமாதானமாய் முடியவும், பிரச்சனையை உருவாக்குகிறவர்கள் இரட்சிக்கப்படவும், இடைநிலங்கள் வாங்கப்படவும், பொருளாதார தேவை சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**புதன்:** டி.வி.ஜி.எம். தலைமை அலுவலகம், கிளை அலுவலகம், சிறுவர் இல்லம் போன்றவைகளுக்கு தேவையான உதவியாளர்கள் தேவனால் அனுப்பப்பட ஜெபியுங்கள்.

**வியாழன்:** டி.வி.ஜி.எம். கட்டிடப்பணிகளை கவனிக்கவும்,கிராமங்களை சர்வே செய்யவும் அழைக்கப்பட்டவர் கிடைக்க ஜெபியுங்கள்.

**வெள்ளி:** கர்த்தருடைய ஊழியங்களுக்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற ஒவ்வொருவர் மேலும் விசேஷித்த ஆசீர்வாதமும், தேவ கிருபையும், இரக்கமும் பெருக ஜெபியுங்கள்.

**சனி:** டி.வி.ஜி.எம் வெட்சைட்டை பார்க்கிறவர்களும், "100 கிராம ஊழியம்" பத்திரிக்கையை படிக்கிறவர்களும், ஜெபிக்கிறவர்களும், அறிமுகப்படுத்துகிறவர்களும், தாங்குபவர்களும் பெருகும்படி ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** புதுக்கோட்டை மாவட்டத்தில் வாடகைக்கு எடுத்திருக்கும் கட்டிடத்தை மையமாக வைத்து சிறு அலுவலகம் ஆரம்பிக்கவும், அங்கு அறிமுகப் பணி செய்ய ஆர்வமுள்ள சகோதர, சகோதரிகள் அர்ப்பணிப்புடன் முன்வரவும் ஜெபியுங்கள்.

### விசேஷ ஜெபக்குறிப்புகள்
### கலிலேயா முகாம்

கர்த்தருக்கு சித்தமானால் 2008 அக்டோபர் 10,11,12 வெள்ளி, சனி, ஞாயிறு கலிலேயா முகாம் கோடாவிளை மெயின் ரோட்டில் கலிலேயா காம்பவுண்டில் நடத்துவதற்கு வாஞ்சிக்கிறோம். ஜெபியுங்கள்.

தேவ செய்தியாளரை கர்த்தர் வெளிப்படுத்தும்படி ஜெபியுங்கள்.

நல்ல காலசூழ்நிலை, மின்சாரம், இசைக்கருவிகள், பாடல்கள், பந்தல் அமைப்பு, உணவு, போக்குவரத்து, பாதுகாவல், பொருளாதாரம், ஆவிக்குரிய நல்ல செய்தி, துதி ஆராதனை, சாட்சிக்கூட்டம் யாவற்றிற்காகவும் ஜெபியுங்கள்.

முகாம் பொறுப்பாளர் **திரு. இரத்தினம் ஆசிரியர் மற்றும் திரு. மனோகர்** ஆசிரியருக்காகவும் அவர்கள் கலிலேயா முகாம் தேவைகளுக்காக சந்தித்து ஜெபிக்கப் போகிற குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபியுங்கள்.

2008 அக்டோபர் 6 – 10 **இராதாபுரம்** யூனியனில் நடைபெறப் போகும் 100 கிராம ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**மாதத்தின் முதல் தேதியில் வாக்குத்தத்த ஆராதனை**
**பகல் 12 மணி நேர துதி ஆராதனை**

ஜுன் – பாஸ்டர் ஜெயபால்



ஜுலை– சகோ.சாமுவேல் ஜெயக்குமார்



ஆகஸ்டு – பாஸ்டர் சிமியோன்



**2008 செப்டம்பர் 1**
**12 மணி நேர துதி ஆராதனை**
இடம் : TVGM தலைமையிடம்
100 கிராமம், திருச்சி.
நேரம் : காலை 7 – மாலை 8 மணி
**துதி ஆராதனை** பகல் 7 – மாலை 7
**பாஸ்டர் ஜெபதாஸ்**
**வாக்குத்தத்த செய்தி:** இரவு 7 – 8
**பாஸ்டர் ஞானதாஸ்,**

**அவரவர் தங்களுக்கு வசதியான நேரம் துதிஆராதனையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.**

**நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகத்திற்கு அறிமுகப் பணியாளர் தேவை!**

எழுதப்படிக்கத் தெரிந்து, ரசீது போட்டுக் கொடுக்கத் தெரிந்த, இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற, உண்மையுள்ள, தியாகமாக, நேரம் கணக்குப் பார்க்காமல் ஊழியம் செய்ய ஒப்புக்கொடுக்க ஆயத்தமுள்ள சகோதரிகள் தேவை. **T.V.G.M.குமரி மாவட்ட அறிமுகப் பணி அலுவலகத்திற்கு** சொந்த இடம் கிடைக்க ஜெபியுங்கள்.

**5 / 3A** கிரவுண் தெரு, வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001. கன்னியாகுமரி மாவட்டம்.
**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**POSTAL REGISTRATION NUMBER**

TN / TR / 17 / 2006 - 2008 ( Inland ) TN / TR / 18 / 2006 - 2008 ( Foreign)

**LICENCED TO POST WITHOUT PREPAYMENT**

TN / TR / 09 / WPP ( Inland ) Posting Date 25th at H.P.O. Trichy.

TN / TR / 09 / WPP ( Foreign) Posting Date 20th at H.P.O. Trichy

## TVGM தலைமை அலுவலகம்

**(ALL RECEIPTS ARE TREATED AS OFFERING TO TVGM)**

**காணிக்கை மற்றும் தபால் அனுப்ப வேண்டிய முகவரி:-**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**4 / 272, HUNDRED VILLAGE**
**SOMARASAMPETTAI,(Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

**Bank டிராப்ட் எடுக்கும் முறையும் நோக்கமும்:-**

**TAMIL VILLAGE GOSPEL MISSION** (100- கிராம ஊழியம், ஜெபவீடு)

**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்)

**ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu. என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, மேற்கண்ட TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முகவரி,தொலைபேசியை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**

**Canara Bank Indian Financial System Code( IFSC ):CNRB 0001249**

TVGM தொடர்புகளுக்கு

STD Ph : 0-431 - 2607241

Fax : 0-431- 2607446

Mobile : 94435 - 44628

Email : 100village@tvgm.org

*Website :*

www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

**மாதாந்திர பத்திரிக்கை**

**"100–கிராம ஊழியம்"** என்ற கிறிஸ்தவ மாதாந்திர பத்திரிக்கையை தமிழ் / ஆங்கிலத்தில் வாங்கி படியுங்கள். ஜெபியுங்கள்.

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**

**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

ഹൺഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री